சர்க்கரை நோய்: தடுக்க.. தவிர்க்க.. சந்தோஷமாய் வாழ...

நவம்பர் 14 உலக சர்க்கரை நோய் விழிப்புணர்வு தினம். இன்னும் மூன்று நாட்களே இருப்பதால் உலகம் முழுக்க சர்க்கரை நோய் பற்றியும், அதற்கான நவீன சிகிச்சைகள் பற்றியும் மக்களிடம் பரவலாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னையில் சர்க்கரை நோய்க்கு சிகிச்சை அளிக்கும் புகழ் பெற்ற மருத்துவமனைகளில் தி.நகரில் அமைந்திருக்கும் 'அகாடா டயாபட்டீஸ் கேர்' மையமும் ஒன்று. அமெரிக்காவில் உள்ள ஹார்வேர்டு யூனிவர்சிட்டியின் கீழ், சர்க்கரை நோய் பற்றிய ஆராய்ச்சி பிரிவாக ஜோஸ்லின் டயாபட்டீஸ் சென்டர் (பாஸ்டனில்) இயங்கிவருகிறது. அதன் வழிகாட்டுதலையும், நவீன மருத்துவமுறைகளையும், ஆய்வுகளையும் பெற்று அகாடா ஹெல்த் கேர் இயங்கிவருகிறது. இந்த மருத்துவ மனையில் பணியாற்றும் சர்க்கரை நோய் நிபுணர்கள் டாக்டர் எம்.ரவி கிரண், டாக்டர் ஜி.சண்முககந்தர் ஆகியோர், சர்க்கரை நோய் தொடர்பாக அளித்த சிறப்பு பேட்டி:

சர்க்கரை நோய் தோன்றுவதற்கான காரணங்கள் என்ன?

"50 சதவீதம் அளவுக்கு பாரம்பரியம் காரணமாக இருக்கிறது. பெற்றோருக்கு இருந்தால் மரபு வழியாக அவர்களது சந்ததியினருக்கு அந்த பாதிப்பு தொடர்கிறது. மீதமுள்ள 50 சதவீத பாதிப்பிற்கு மனஅழுத்தம், உடற்பயிற்சியின்மை, உணவுப் பழக்கம் சரியில்லாமை, தூக்கமின்மை, உடல் குண்டாக இருத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இருக்கின்றன. உணவை எடுத்துக்கொண்டால் நூர்ச்சத்து இல்லாத உணவுகளை அதிகம் சாப்பிடுகிறோம். உடனே சர்க்கரையாக மாறும் கூவிட், கேக் வகைகளை நிறைய உண்ணுகிறோம். பாலீஸ் செய்யப்பட்ட அரிசி சாதத்தையும் நிறைய சாப்பிடுகிறோம். இவை எல்லாம் நோய்க்கான காரணமாகிறது. உடற்பயிற்சி இல்லாததால் உடல் குண்டாகிறது. எடையை குறைக்க நடப்பது நல்லது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதைக்கூட அவசர அவசரமாக ஏதோ ஒரு வேலைபோல் பதட்டத்தோடு செய்கிறார்கள். பாரம்பரியமும், வாழ்க்கை முறையுமே சர்க்கரை நோய்க்கான முக்கிய காரணங்களாக இருக்கின்றன"

(தற்போது இந்தியாவில் 6 கோடியே 20 லட்சம் பேர் சர்க்கரை நோயாளிகளாக இருக்கிறார்கள். 7.40 கோடி பேர் சர்க்கரை நோய் வருவதற்கான அதிக வாய்ப்பு கொண்டவர்களாக இருக்கிறார்கள். 2009-ல் இருந்து 2012-க்குள் 1 கோடியே 20 லட்சம் பேர் கூடுதலாக சர்க்கரை நோயாளிகளாகியிருக்கிறார்கள். 2030-ம் ஆண்டில் இந்தியாவில் சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை 10 கோடியாகிவிடும் என்று கணிக்கப்படுகிறது. நகரங்களை பொறுத்தவரையில் சண்டிகார் முதலிடத்தையும், சென்னை பாதிப்பில் இரண்டாம் இடத்தையும் பிடித்திருக்கிறது. சென்னையில் சர்க்கரை நோய் வருவதற்கான அதிக வாய்ப்பு கொண்டவர்களாக 'ஐந்தில் ஒருவர்' இருக்கிறார், என்று சமீபத்திய சர்வே தெரிவிக்கிறது. உலகின் சர்க்கரை நோயாளிகளின் தலைநகரம் இந்தியா என்று குறிப்பிடப்படுகிறது.)

சர்க்கரை நோய் ஏற்படும்போது தோன்றும் பொதுவான அறிகுறிகள் என்ன?

"இரவில் இரண்டு தடவையோ அதற்கு மேலாகவோ சிறுநீர் கழிக்க வேண்டிய நிலை ஏற்படுவது, அதிக தாகம், அதிக அசதி, அதிக பசி, உடல் எடை ஒரு சில மாதங்களில் ஐந்தாறு கிலோ வரை குறைதல், சிறிய கொப்பளங்கள் தோன்றி புண்களாக மாறி ஆறாமல் இருத்தல், மயக்கம் வருதல் இப்படி பல அறிகுறிகள் உள்ளன. இதில் ஒன்றிரண்டோ, பலவோ தோன்றினால் உடனே மருத்துவரிடம் ஆலோசனை பெற்று, சர்க்கரையின் அளவை பரிசோதித்து சிகிச்சையை தொடங்கவேண்டும்"

அறிகுறிகளை கண்டு கொள்ளாமலே இருந்தால், எப்படிப்பட்ட விளைவுகள் தோன்றும்?

"பார்வை பாதிப்பு, நரம்பு தளர்ச்சி, கிட்னி பாதிப்பு போன்றவை தோன்றும். உடலில் கெட்ட கொழுப்பு அதிகரித்து, ரத்த நாளங்களில் அடைப்பு ஏற்பட்டு இதயம் பாதிக்கும். அவர்கள் தாம்பத்ய வாழ்க்கையை அனுபவிப்பதிலும் சிக்கல் ஏற்படும்"

சர்க்கரை நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட பின்பு, அந்த நோயாளிகள் தங்கள் வாழ்க்கையை எப்படி முறைப்படுத்தி கொள்ளவேண்டும்?

"எதை சாப்பிடுவது, எவ்வளவு சாப்பிடுவது, எவ்வப்போது சாப்பிடுவது என்பதில் அவர்கள் கவனம் செலுத்தி, கடைபிடிக்கவேண்டும். நோயை கட்டுக்குள் கொண்டுவந்த பின்பு அவர்கள் டாக்டர்கள் ஆலோசனைப்படி பழமும் அளவோடு சாப்பிடலாம். மன அழுத்தம் ஏற்படாமல் வாழவும், மன அழுத்தம் வந்தால் அதை போக்கவும்

டாக்டர். ஜி.சண்முககந்தர் டாக்டர். எம். ரவி கிரண்

யோகா, தியானம் போன்றவைகள் கற்றுத்தருகிறோம். உடற்பயிற்சி மிக அவசியம். ஒவ்வொருவர் உடலுக்கும் தக்கபடி உடற்பயிற்சி முறை மாறும். அதற்கும் எங்களிடம் நிபுணர்கள் இருக்கிறார்கள். இன்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் வாழ்க்கை பிரச்சினைகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அந்த பிரச்சினைகளை மனதில் போட்டு குழப்பி, நோயாளிகளாக மாறுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மனோதத்துவ கவுன்சலிங் கொடுக்கவும் சைக்காலஜிஸ்டுகள் உள்ளனர். ஒருவர் சர்க்கரை நோயாளி என்று கண்டுபிடிக்கப்பட்டதும் அவரது மனதையும், உடலையும் மேம்படுத்தும் அனைத்து சிகிச்சைகளையும் நாங்கள் கொடுக்கிறோம். அதற்கு தக்கபடி அவர்கள் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக்கொண்டால் போதுமானது"

பெற்றோருக்கு சர்க்கரை நோய் இருந்தால், அவர்களது குழந்தைகளுக்கும் சர்க்கரை நோய் வந்துவிடுமா? எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்படாத அளவிற்கு அந்த குழந்தைகள் எப்படி வளர்க்கப்படவேண்டும்?

"பெற்றோர் இருவருக்குமே இருந்தால் அவர்களது குழந்தைகளுக்கு சர்க்கரை நோய் வரும் வாய்ப்பு அதிகம். ஐந்து வயதில் இருந்தே அந்த குழந்தைகள் மீது அதிக அக்கறை செலுத்தவேண்டும். அப்போதிருந்தே சரிவிகித சத்துணவு அவர்களுக்கு வழங்கப்படவேண்டும். உடல் வேலை மிகுந்த விளையாட்டுகளில் அவர்களை ஈடுபடுத்தவேண்டும். மன அழுத்தம் கொடுக்காத அளவுக்கு அவர்கள் கல்வி முறை, வாழ்க்கை முறையை அமைக்கவேண்டும். இதை எல்லாம் செய்தாலும் எதிர்காலத்தில் அவர்களுக்கு சர்க்கரை நோய் வராது என்று கூறமுடியாது. தள்ளிப்போடலாம். தடுக்க முயற்சிக்கலாம் அவ்வளவுதான்"

நகரத்து மனிதர்கள் மட்டுமின்றி, விவசாய வேலை பார்க்கும் கிராமத்து மனிதர்களும் இப்போது சர்க்கரை நோயால் பாதிக்கப்படுகிறார்களே அது ஏன்?

"ரத்த அழுத்தம், மன அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவை கிராம மக்களுக்கு குறைவு என்ற கருத்து முன்பு இருந்தது. இப்போது அவர்களது வாழ்க்கை முறையும் நகரத்து மக்கள் வாழ்க்கை போல் மாறிக்கொண்டிருக்கிறது. அதனால் கிராமங்களிலும் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. நாங்கள் புறநகர் பகுதியில் 'அவுட் ரீச்' என்ற நோய் கண்டறியும் முகாம்களை நடத்துகிறோம். அங்கெல்லாம் சர்க்கரை நோயால் அதிகமான பேர் பாதிக்கப்பட்டிருப்பதை உணர முடிகிறது"

'உலகின் சர்க்கரை நோயாளிகளின் தலைநகரம் இந்தியா' என்று கூறும்போது இந்தியர்களுக்கு பயம்தானே அதிகரிக்கும். அந்த பயமே அதிக மனஉளைச்சலை உருவாக்கி, சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திவிடும் அல்லவா?

"அதை மக்கள் ஒரு விழிப்புணர்வாகத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும். பயப்படாமல், நமக்கும் வரலாம் என்ற முன்னெச்சரிக்கையாக எடுத்துக்கொள்வது ஆரோக்கியத்திற்கு ஏற்றது"

சர்க்கரை நோயாளிகள் தாம்பத்ய சுகம் அடைவதில் எந்த மாதிரியான நெருக்கடிகள் தோன்றும்?

"ஆண்களுக்கும், பெண்களுக்கும் மனதளவில் செக்ஸ் ஆர்வம் குறையும். ஆண்களுக்கு குறிப்பிடத்தக்க மாற்றமாக உறுப்பு விறைப்புத்தன்மை குறையும். பெண்களுக்கு உறுப்பு பசைத்தன்மை குறைந்து, வறட்சி, வலி தோன்றும். சர்க்கரை நோயை குறைக்கும் சிகிச்சையோடு, செக்ஸ் செயல்பாட்டை அதிகரிக்கவும் மருந்துகொடுக்கப்படும்"

சர்க்கரை நோயாளிகளான பெண்கள் கர்ப்பிணியாவதில் என்னென்ன தடைகள் ஏற்படும்?

"அபார்ஷன் ஆகி, கருத்தரிப்பதில் சிக்கல் ஏற்படும். கருத்தரித்து விட்டாலும் குழந்தை குறைபிரசவமாகவும், குழந்தை அளவுக்கு அதிகமாக பெரிதாகவும் வாய்ப்பிருக்கிறது. அதனால் சர்க்கரை நோயாளிகளான பெண்கள் கர்ப்பத்திற்கு தயாராகும்போதே, டாக்டரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளவேண்டும். கர்ப்பக்காலத்தில் சில பெண்களுக்கு சர்க்கரை நோய் தோன்றி, பின்பு சீராகும். அதையும் கவனித்து சிகிச்சை செய்து, பிரசவத்திற்கு பின்பும் சர்க்கரை நோய் தொடராத அளவுக்கு பார்த்துக்கொள்ள வேண்டும்"

சர்க்கரை நோயாளியான பெண் பெற்றெடுக்கும் குழந்தை எதிர்காலத்தில் சர்க்கரை நோயாளியாக மாறாமல் இருக்க, கருவிலே மரபணு மாற்றம் செய்யும் அளவுக்கு ஏதேனும் ஆய்வுகள் நடக்கிறதா?

"சர்க்கரை நோய் ஒரு ஜீனால் வருவதல்ல, 50-100 ஜீன்களால் உருவாகிறது. அதனால் அவைகளை எல்லாம் கருவிலே கண்டறிந்து மாற்றம் செய்வது என்பது சிக்கலானது. ஆனால் சர்க்கரை நோயை உருவாக்கும் சில ஜீன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளை பாஸ்டனில் உள்ள எங்களது ஆய்வுக்கூடத்தில் வைத்து ஆய்வு செய்து வருகிறார்கள். சிறுவர்களுக்கு ஏற்படும் ஒருவித மஞ்சள்காமாலை நோய் அவர்களின் கணையத்தை தாக்கி செயலிழக்கவைத்து, அவர்களை சர்க்கரை நோயாளிகளாக்குகிறது. அதை தடுப்பது பற்றியும் எங்கள் அமெரிக்க மையத்தில் ஆய்வு நடந்துவருகிறது"

சர்க்கரை நோயாளிகள் உண்ண வேண்டிய உணவுகள் எவை?

"ஒவ்வொருவரும் விரும்பும் உணவு, ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் உணவு, அவர்களது பொருளாதார நிலை போன்றவைகளுக்கு தக்கபடி அவர்களுக்கான உணவுப் பட்டியலை எங்கள் சத்துணவு நிபுணர் குழு தயாரித்து கொடுக்கும். அதுதான் சிறந்ததாக இருக்கும். இப்போது உணவு விஷயத்தில் பெரிய கட்டுப்பாடுகள் ஒன்றும் இல்லை. விரும்பும் உணவை நோயாளிகள் டாக்டர்கள் ஆலோசனைப்படி ஓரளவு சாப்பிடலாம்"

மதுப்பழக்கமும், புகைப் பழக்கமும் சர்க்கரை நோய்க்கு எப்படி காரணமாகிறது?

"மது அருந்துகிறவர்களுக்கு ஈரல், கணையம் பாதிக்கப்படும். கணையம் பாதிக்கப்பட்டால் சர்க்கரை நோய் வரக்கூடும். மது அருந்துகிறவர்கள் பிரச்சினைக்குரிய உணவுகளை அதிகம் சாப்பிடுவதால் உடல் குண்டாகிவிடுகிறார்கள். அதுவும் சர்க்கரை நோயை உருவாக்கும். புகைப்பிடிப்பதால் உடலில் பல உறுப்புகள் பாதிப்படையும். ஒட்டுமொத்த ஆரோக்கியம் அதனால் சீர்குலைவதால், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து, சர்க்கரை நோய்க்கான வாய்ப்பை அதிகரிக்கும்"

சர்க்கரை நோய்க்கு நவீன சிகிச்சைகள் ஏதேனும் உள்ளதா?

"ஒரு நோயாளி சர்க்கரை நோயுடன் உடல் குண்டாகவும் இருந்தால் முன்பு இருவிதமான மருந்துகள் வழங்கப்பட வேண்டியதிருந்தது. இப்போது கொடுக்கப்படும் ஒரே மருந்து இன்சுலினையும் சுரக்கும். உடல் எடையையும் கட்டுப்படுத்தும். தினமும் இன்சுலின் ஊசி போடுவதற்கு பதில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை போடும் ஊசியும், வாரத்திற்கு ஒருமுறை போடும் ஊசியும் அமெரிக்காவில் அறிமுகமாகிவிட்டது. சில மாதங்களில் இங்கும் வந்துவிடும்.

இன்சுலின் போடும் நோயாளிகளுக்கு 'இன்சுலின் பம்ப்' என்ற சிறிய கருவியை தோலுக்கு அடியில் செருகிவிட்டால், அதன் மூலம் தேவையான இன்சுலினை 'மைக்ரோட்ராப்'பாக செலுத்தலாம். எதிர்காலத்தில், 'புரோகிராம்' செய்து வைத்தால், அதுவே தானாக இயங்கி, தேவைக்கு இன்சுலினை செலுத்தும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுவிடும். அப்போது இயல்பாகவே உடலுக்கு தேவையான இன்சுலின் கிடைத்துவிடும். அது சர்க்கரை நோய் சிகிச்சையில் மைல்கல்லாக இருக்கும்.

சர்க்கரை நோய் பாதிக்கப்பட்டவரின் எலும்பு மஜ்ஜையில் இருந்து ஸ்டெம்செல்களை லட்சக்கணக்கில் எடுத்து சேகரித்து, அதை கணையத்தின் அருகில் கொண்டு சென்று செலுத்தி, கணையத்தின் செயல்பாட்டை அதிகரிக்க முடியும் என்பதை பிராணிகள் மூலமான ஆய்வில் உறுதி செய்திருக்கிறார்கள். கணையம் நன்றாக செயல்படும்போது அது இயல்பாகவே இன்சுலினை சுரக்கத் தொடங்கிவிடும். அடுத்த கட்டமாக இந்த ஆய்வு மனிதர்களிடம் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆய்வு வெற்றி பெற்றால் அது, சர்க்கரை நோயாளிகளுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமையும்" என்கிறார்கள், டாக்டர்கள் எம்.ரவிகிரணும், ஜி.சண்முககந்தரும்.

சிகிச்சை பற்றிய கலந்துரையாடல்

உஷாரய்யா உஷாரு..

அவள் கல்லூரி மாணவி. 19 வயது. அவன் 24 வயது வாகன ஓட்டுனர், ஏழை. அவள் நடுத்தர வருவாய் குடும்பத்தை சேர்ந்தவள். பெற்றோரின் எதிர்பார்ப்பிற்கு ரிய மகளாக சந்தோஷமாக வளர்ந்து கொண்டிருந்தாள்.

கல்லூரிக்கு போகும் வழியில் இருவருக்கும் ஏற்பட்ட நட்பு காதலாய் வளர்ந்தது. வழக்கமாக தோழிகள் காதலுக்கு பச்சைக்கொடி காட்டி, சேர்த்து வைப்பார்கள். இவளது தோழிகளோ, 'நீங்கள் இருவரும் வெவ்வேறு ஜாதியை சேர்ந்தவர்கள். உன் பெற்றோர் உன்னை மகாராணி மாதிரி வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவனிடம் சொந்த வாகனம்கூட இல்லை. கூலிக்கு ஓட்டிக்கொண்டிருக்கிறான். அவனை நீ காதலிப்பது, உன் எதிர்காலத்திற்கு நல்லதில்லை' என்று உண்மையை எடுத்துச் சொன்னார்கள்.

அவனோ, 'என்னிடம் நல்ல தொழில் இருக்கிறது. எங்கு போனாலும் நம்மால் வாழ முடியும். நாம் வெவ்வேறு ஜாதியாக இருப்பதால், எப்படியும் என்னை திருமணம் செய்து கொள்ள உன் பெற்றோர் சம்மதிக்கமாட்டார்கள். அதனால் யாரிடமும் சொல்லாமல் பக்கத்து மாநிலத்திற்கு போய் விடலாம். அங்கு போய் நிம்மதியாக வாழ்க்கை நடத்துவோம். சில வருடங்களிலே நிறைய பணம் சம்பாதித்து, ஊருக்கு வந்து உன் பெற்றோர் முன்பு தலை நிமிர்ந்து நிற்கலாம்' என்றான்.

தோழிகள் சொன்னதைவிட காதலன் சொன்னதே அவள் காதில் ஏறியது. திடீரென்று ஒரு நாள், யாரிடமும் சொல்லாமல், கல்லூரி படிப்பை இடையிலே நிறுத்திவிட்டு காதலனோடு போய்விட்டாள்.

பெற்றோர் அதிர்ந்து விசாரித்தபோது, அவளே அம்மாவிடம் செல்போனில் தொடர்பு கொண்டு, 'காதலனோடு வந்துவிட்டேன். யாரும் தேடவேண்டாம். அவனையே திருமணம் செய்துகொண்டு வாழப்போகிறேன்..' என்றாள். பெற்றோர் அதோடு அவளை மறந்துவிட்டார்கள்.

பக்கத்து மாநிலம் சென்று அவள், முறைப்படி அவனை திருமணம் செய்துகொண்டு புதிய வாழ்க்கையை தொடங்கினாள். முதலிலே அதிர்ச்சி. அவன் குடிக்கு அடிமையாகி இருந்தான். வேலை தேடுகிறேன்.. வேலை தேடுகிறேன் என்று கூறிக்கொண்டே வெளியே போய் குடித்துவிட்டு வந்து தூங்கினான்.

தலைவிதியை நொந்துகொண்டு, கடை ஒன்றில் விற்பனை பணிப்பெண்ணாக சேர்ந்து அவள் வாழ்க்கையை நகர்த்த ஆரம்பித்தபோது, நோய்வாய்ப்பட்டாள். தற்போது சீசன் போல் சுழன்றடிக்கும் நோய் அவளை தாக்கியிருந்தது. அவன் சரியான சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யாததால் அவள், பத்து நாட்கள் உயிர் போராட்டத்திற்கு பிறகு இறந்துவிட்டாள்.

உடனே தனியார் ஆம்புலன்ஸ் ஒன்றிற்கு போன் செய்து வரவழைத்தான். உடலை ஏற்றினான். தமிழ்நாட்டில் வசிக்கும் அவளது தாய் வீட்டிற்கு போகவேண்டும் என்று, விலாசத்தை கையில் கொடுத்தான். தானும் ஏறிக்கொண்டான். ஆம்புலன்ஸ் 500 கி.மீ. தூரத்தை தாண்டி, வந்து கொண்டிருந்தபோது நிறுத்துமாறு கூறி, டீ சாப்பிட இறங்கினான். அவ்வளவுதான் ஆளை காணவில்லை. செல்போனில் அழைத்தபோது, அது 'சுவிட்ச் ஆப்' என்றது.

வேறு வழியில்லாமல் விலாசத்தை வைத்துக்கொண்டு, அடுத்த 50 கி.மீ. தூரத்தில் இருந்த அவளது பெற்றோரின் வீட்டு முன்பு கொண்டுபோய் ஆம்புலன்சை நிறுத்தி விவரத்தை சொன்னார்கள். அவளது பெற்றோர்களோ, மனதை கல்லாக்கிக்கொண்டு, 'இவள் எப்போது அவனோடு ஓடினாளோ அப்போதே நாங்கள் ஈமக்காரியங்கள் அனைத்தையும் செய்து முடித்துவிட்டோம். மீண்டும் செய்ய முடியாது. இந்த பிணம் எங்களுக்கு தேவையில்லை. எங்கேயாவது கொண்டு போடுங்கள்' என்று கூறிவிட்டனர்.

ஆம்புலன்ஸ் ஓட்டுனர் அருகில் உள்ள போலீஸ் நிலையத்தில் தகவல் சொன்னார். அங்கும் சரியாக வழி காட்டப்படவில்லை. பின்பு பக்கத்து மாநிலத்தில் இருக்கும் தன் ஆம்புலன்ஸ் நிறுவன உரிமையாளருக்கு போன் செய்து விஷயத்தை சொன்னார். அவர், 'நாமும் அந்த பிணத்தை புறக்கணிக்கவேண்டாம். அப்படியே இங்கே திரும்ப கொண்டுவந்துவிடுங்கள். நாமே அனாதை பிணம் என்று இறுதிக்காரியங்களை செய்து, சட்டப்படி அடக்கம் செய்து விடலாம்' என்றார்.

அந்த பிணம் வந்த இடத்தை நோக்கி மீண்டும் பயணப்பட்டது.

இளம் பெண்களே இப்படிப்பட்ட கொடுமையான நிகழ்வுகள்கூட 'காதலில்' நடக்கின்றன. மனசில வைச்சிக்குங்க.. யார் கிட்டேயும் மாட்டிக்காதீங்க..!

–உஷாரு வரும்.

திகைக்க வைக்கும் 'தேசப் பொக்கிஷம்'

உலகிலே அதிகமான நாடுகளில் ஸ்டாம்புகள் மூலம் கவுரவிக்கப்பட்ட ஒரே தலைவர், காந்திஜி மட்டுமே. அவரது சிறுவயது புருவம் முதல் இறுதிக்காலம் வரையிலான பல்வேறு தோற்றங்கள் தபால்தலைகளாக வடிவமைக்கப்பட்டு உலகம் முழுக்க வெளிவந்துள்ளன.

காந்திஜியின் முதல் தபால் தலையே ஒரு நெகிழ்ச்சியான பின்னணியோடுதான் வெளியானது.

காந்திஜியின் 80-வது பிறந்த நாளில் முதல் தபால்தலையை வெளியிடவேண்டும் என்று சுதந்திர இந்தியாவின் தலைவர்கள் ஒன்றுகூடி முடிவு செய்தனர். அது, மகாத்மாவுக்கு நாடு செலுத்தும் மிகப்பெரிய கவுரவமாக இருக்கும் என்று கருதி, நான்கு விதமான ஸ்டாம்புகளை வடிவமைத்தனர். காந்திஜிக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கவேண்டும் என்று கருதி, அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேரு அதை ரகசியமாகவைத்து, தானே முன் நின்று அந்த வடிவமைப்பு பணிகளை மேற்கொண்டார். ஆனால் வெண்ணை திரண்டு வரும்போது தாழி உடைந்த கதைபோல், ஸ்டாம்ப் வடிவமைப்பு முழுமை பெறும் காலகட்டத்தில் (1948-ம் ஆண்டு ஜனவரி 30-ந்தேதி) காந்திஜி சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டார். தனது படத்தோடு ஸ்டாம்ப் தயாரிக்கப்பட்டது தெரியாமலே காலமாகிவிட்டார். அந்த நான்கு வித ஸ்டாம்புகளும் 1948-ம் ஆண்டு சுதந்திர தின விழாவில் தான் வெளியிடப்பட்டது.

சுதேசியாகவே வாழ்ந்து, முழு வாழ்க்கையையும் நாட்டிற்காக அர்ப்பணித்த மகாத்மாவின் அந்த ஸ்டாம்புகள் சுவிட்சர்லாந்தில் அச்சடிக்கப்பட்டது என்பது ஆச்சரியமான செய்தி. (அவைகளை தவிர்த்து, 1926-ம் ஆண்டில் இருந்து இன்று வரை நம் நாட்டில் வெளியிடப்படும் அனைத்து ஸ்டாம்புகளும் உள்நாட்டில்தான் அச்சடிக்கப்படுகிறது. காந்திஜியின் ஸ்டாம்ப் வெளிநாட்டில் அச்சடிக்கப்பட்ட அதே ஆண்டில், நாசிக்கில் ஸ்டாம்ப், கரன்சி, நாணயம் உருவாக்கும் அச்சகங்களும், ஆலைகளும் நவீனப்படுத்தப்பட்டன)

அந்த அபூர்வ ஸ்டாம்புகள் காந்திஜியின் நினைவாக 1948-ம் ஆண்டு வெளியிடப்பட்டபோது ராஜாஜி இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தார். அவர் சிறப்புமிகுந்த அந்த அஞ்சல்தலைகளை அவரது அதிகாரபூர்வ தேவைகளுக்கு பயன்படுத்த விருப்பம் தெரிவித்தார். அதனால் அரசு தேவைகளுக்காக பயன்படுத்தும் 'சர்வீஸ்' என்ற வாசகம் அதில் பொறிக்கப்பட்டது. இதில் இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால், உலகிலே மிக குறைவாக அச்சிடப்பட்ட ஸ்டாம்ப் என்ற பெருமையை அவை பிடித்திருக்கின்றன. 100 ஸ்டாம்புகள் மட்டுமே அந்த டிசைனில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. அதனால் அது உலகில் விலைமதிப்புமிக்க அஞ்சல்தலையாக போற்றப்படுகிறது. அரிதான இந்த பொக்கிஷத்தின் மதிப்பு ரூ.1 கோடிக்கு மேல். கடந்த வருடம் லண்டனில் இந்த ஸ்டாம்ப் ஒன்று ஏலத்தில் விடப்பட்டது. அது 92 லட்சம் ரூபாய்க்கு ஏலம்போனது.



விலைமதிப்பற்ற காந்திஜி ஸ்டாம்ப்.

காந்திஜிக்கு முதன்முதலில் அஞ்சல்தலை வெளியிட்ட வெளிநாடு, அமெரிக்கா. 1961-ம் ஆண்டு ஜனவரி 26-ல் அது வெளியிடப்பட்டது. காங்கோ நாடு 1967-ல் வெளியிட்டு இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

காந்திஜி உருவத்துடன் முதன்முதலில் வெளியிடப்பட்ட அமெரிக்க தபால்தலைகள்.

1969-ம் ஆண்டு காந்திஜியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அப்போது 40 நாடுகள் பல்வேறு விதமான ஸ்டாம்புகளை வெளியிட்டு மகாத்மாவை பெருமைப்படுத்தின. காலம் அடுத்த நூற்றாண்டை தொட்ட பின்பும், இந்த சாதனை இன்னும் முறியடிக்கப்படவில்லை.

காந்திஜியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் நினைவாக பூட்டான் இரண்டு தபால்தலைகளையும், சோமாலியா மூன்று வித தபால்தலைகளையும் வெளியிட்டன. இதன் பின்னணியில் இருக்கும் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், மேற்கண்ட ஐந்தும் இந்தியாவில் நாசிக்கில் அச்சிடப்பட்டதாகும்.

மகாத்மாவின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டபோது, உலகம் முழுக்க நூற்பது நாடுகள் நினைவு தபால்தலைகளை வெளியிட்டதால், அப்போது அந்த செய்தி இங்கிலாந்து பாராளுமன்றத்தில் எதிரொலித்தது. 'விடுதலைப் போரில் நமக்கு நடந்ததை நினைத்து நாம் வெட்கப்படவேண்டியதில்லை. உலகமே அந்த மாமனிதரை நினைவுகூறும் போது நாமும் அவருக்கு புகழ் அஞ்சலி செலுத்திதான் ஆகவேண்டும். அதற்காக ஸ்டாம்ப் வெளியிடவேண்டும்' என்று பெரும்பாலான எம்.பி.க்கள் வற்புறுத்தினார்கள். அதை தொடர்ந்து, முதல் முறையாக தன் நாட்டு தலைவர் அல்லாத மற்றவருக்கு ஸ்டாம்ப் வெளியிட இங்கிலாந்து முடிவுசெய்து, காந்திஜிக்கு அந்த பெருமையை வழங்கியது. அந்த ஸ்டாம்பை வடிவமைத்தவர் இந்தியரான பீமன் முல்லிக். அந்த ஸ்டாம்ப் கொல்கத்தாவில் 1970-ல் நடந்த காந்திஜி தபால்தலை கண்காட்சியில், சிறந்த டிசைனுக்கான முதல் பரிசை பெற்றது.

இங்கிலாந்து வெளியிட்ட காந்திஜியின் தபால்தலை.

சைக்கிள் ஓட்டும் காந்திஜி ஸ்டாம்ப்

வெளிநாடுகள் வெளியிட்டிருக்கும் ஸ்டாம்புகள் ஏராளம் என்பதால், காந்திஜியின் பல்வேறு முகபாவங்கள், தோற்றங்கள் ஸ்டாம்புகளில் இடம் பிடித்துள்ளன. உட்கார்ந்து எழுதுவது, பேப்பர் படிப்பது, தொண்டர்களுடன் நடந்து வருவது, கும்பிடுவது, ரெயிலில் இருந்து இறங்குவது, சிரிப்பது, நூல் நூற்பது, தியானம் செய்வது, சிறுவன் ஒருவன் கம்பை பிடித்தபடி அவரை அழைத்து செல்வது, டெலஸ்கோப் பார்ப்பது, சைக்கிளில் செல்வது.. இப்படி நீள்கிறது காட்சிகள். அவர் மரணமடைந்து கிடப்பதும் ஸ்டாம்ப் ஆக்கப்பட்டுவிட்டது.

எதற்குமே அஞ்சாத, எதற்குமே வருத்தப்படாத காந்திஜி தனது மனைவி கஸ்தூரி பாய் மரணமடைந்ததும் மனம் வெதும்பினார். 'அவள் இல்லாமல் நான் எப்படி வாழ்வேன்' என்று அழுதார். காந்திஜியின் வாழ்க்கைப் பயணத்தில் தனது 13 வயதில் இருந்து நடக்கத் தொடங்கிய கஸ்தூரி பாய் அம்மையாரை, கணவருடன் இணைத்து வெளியான ஸ்டாம்ப் எண்ணிக்கை மிக சொற்பம். இந்தியாவில் ஒரு சில ஸ்டாம்ப்களில் ஜோடியாக தோன்றினாலும், வெளிநாட்டு ஸ்டாம்ப்களில் ஒன்றில்கூட தம்பதியாக அவர்கள் காட்சிதரவில்லை.

காந்திஜிக்காக வெளிநாடுகள் காட்டன் துணி, பிளாஸ்டிக், தங்க இழை, அலுமினிய இழை போன்றவைகளிலும் ஸ்டாம்ப்கள் வெளியிட்டுள்ளன.

போர்ச்சுக்கீசிய குட்டித்தீவுகளில் குறிப்பிடத்தக்கவை செயின்ட் தாமஸ் மற்றும் பிரின்ஸ் தீவுகள். இவை மகாத்மாவை பெருமைப்படுத்தும் விதத்தில் அற்புதமான தபால்தலை ஒன்றை வடிவமைத்து வெளியிட்டது. அந்த ஸ்டாம்பில் இடம் பெற்ற காந்திஜியை உலகப்புகழ்பெற்ற ஓவியர் பிகாசோ வரைந்துள்ளார். மிகக் குறைந்த அளவிலே அச்சிடப்பட்ட அவை உலகத்தின் அபூர்வங்களில் ஒன்றாக போற்றப்படுகிறது.

பிகாசோ வரைந்து செயின்ட் தாமஸ் பிரின்ஸ் வெளியிட்ட தபால்தலை.

இந்தியா இதுவரை 45-க்கு மேற்பட்ட காந்திஜி உருவம் பொறிக்கப்பட்ட ஸ்டாம்புகளையும், 200-க்கு மேற்பட்ட சிறப்பு முத்திரைகளைக்கொண்ட தபால் உறைகளையும், அஞ்சல் அட்டைகளையும் வெளியிட்டிருக்கிறது.

போலந்து, காந்திஜிக்கு முதன் முதலில் அஞ்சல் அட்டை (போஸ்ட் கார்டு)